<u>**கம்பம் நகராட்சி**</u>

**2019–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் (21.02.2019) ஆம் நாள் வியாழன் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

<u>**கூட்டப் பொருட்கள்**</u>

| | |
|---|---|
| **1.** | இந்நகராட்சி உரக்கிடங்கில் தெருவிளக்கு மின் இணைப்பு எண். **560007252–ல்**, **10** தெருவிளக்குகள் (1x40w குழல் விளக்குகள்) இருந்தது. தற்போது உரக்கிடங்கில் புதியதாக பொருத்திய இயந்திரங்களுக்கு மின் இணைப்பு பெறும் பொருட்டு, புதிய மின் மாற்றி மற்றும் உயரழுத்த மின்பாதை புதியதாக அமைக்கப்பட்டதன் காரணமாக, அந்த இடத்தில் இருந்த 7 தெரு விளக்கு மின் கம்பங்களை அகற்றி HT மின் வழித்தடம் நிறுவியதால் தெருவிளக்கு LT மின் பாதை அமைக்க இயலாத நிலை ஆகிவிட்டது. இதனால் அங்குள்ள 10 தெருவிளக்குகளில் 7 விளக்குகள் கழற்றப்பட்ட நிலையில் இருப்பதை, நகருக்குள் தெருவிளக்கு வசதி இல்லாத இடங்களில் மாற்றம் செய்து பொருத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>..** பொதுமக்களின் நலன் கருதி மேற்படி ஏழு விளக்ககளை, தெருவிளக்க மின் இணைப்பு எண். P 2764–ல் இரண்டு விளக்குகளும், P 2755–ல் ஒரு விளக்கும், P 2761–ல் ஒரு விளக்கும், M 2366 –ல் மூன்று விளக்குகளும் பொருத்தி பணி முடிக்கலாம். |
| **2.** | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு **1, 4, 6, 8, 13, 14, 16, 18, 23, 24, 26** வரை மொத்தம் **11** வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவுப் பணியினை மேற்கொள்ளும் பொரட்டு **67** துப்புரவு பணியாளர்களை வழங்க **14.02.2019–ம்** நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற கீர்காணும் இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ (ஒரு மாதத்திற்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | Trustus Outsourcing Solutions Private Limited, Chennai. | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 423/– | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.24% குறைவு |
| 2. | Relyon Facilities Services Private Limited, Chennai. | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 420/– | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.94% குறைவு |

| | |
|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>..** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.94% குறைவாக கொடுத்துள்ள Relyon Facilities Services Private Limited, Chennai –இன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 3398/2018/எச்1)** |

3. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு 33 வார்டுகளில் டெங்கு மற்றும் இதர கொசுக்களின் மூலம் பரவக்கூடிய நோய்கள் பராவமல் தடுப்பதற்கு, 63 கொசு ஒழிப்பு (னுகூஷஊ) பணியாளர்களை வழங்குவதற்கு 19.02.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வ்ரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற கீழ்காணும் இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ (ஒரு மாதத்திற்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | Trustus Outsourcing Solutions Private Limited, Chennai. | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 288/– | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.69% அதிகம் |
| 2. | Relyon Facilities Services Private Limited, Chennai. | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 285/– | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% குறைவு |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% குறைவாக கொடுத்துள்ள Relyon Facilities Services Private Limited, Chennai –இன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 3963/2018/எச்1)

4. தனி அலுவலரின் முன் அனுமதியின்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் டி.என்.60 ஒய். 1959 வாகனத்திற்கு மராமத்து பணிகள் செய்த தகுதிச்சான்று பெறுவதற்கு 06.02.2019–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. பி. முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 1,29,900/– |
| 2. | திரு. எஸ். முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>கம்பம். | 1,45,900/– |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம். (ந.க.எண். 236/2019/எச்1)

5. இந்நகராட்சியில் 2018–19 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டம் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கும் 7 நகராட்சி பள்ளிகள் மற்றும் 4 அரசு பள்ளிகளின் கழிப்பறைகள் மற்றும் வளாகப்பகுதிகளை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு உரிய பொருட்களுடன் பணியாளர்களை வழங்க **30.01.2019** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற கீழ்காணும் மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ (ஒரு மாதத்திற்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | Sun (Tamil Nadu) Secuirity Management Services Private Ltd., Madurai | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. **440/–** | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **18.06%** குறைவு |
| 2. | Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. **537/–** | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக உள்ளது. |
| 3. | Relyon Facilities Services Private Limited, Ist Floor. No.2/20, Second Cross Street, Indira Nagar, Adyar, Chennai-600 020. | நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. **500/–** | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **6.89%** குறைவு |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **18.06%** குறைவாக கொடுத்துள்ள Sun (Tamil Nadu) Secuirity Management Services Private Ltd., Madurai – இன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 3398/2016/எச்1)**

| | |
|---|---|
| 7. | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1594, நாள். 28.09.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 13.12.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொது நிதி 2018–2019</u> வார்டு எண். 20, காளவாசல் வடக்கு 7–வது தெருவில் பழைய பழுதடைந்த கழிப்பிடத்தை அகற்றிவிட்டு சிறுவர் விளையாட்டு திடல் அமைக்கும் பணி | 2,50,000/– | வி. கிருஷ்ணன் | – | 0.04 |
| | | | எல். ராஜேந்திரன் | 0.80 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.04 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1938–9/2018/இ1)

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 21.02. 2019**
**இடம். கம்பம்**